## பொன்மனை தேர்வு நிலை பேரூராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

ந.க.எண்111/2024/அ1 நாள்: 02-04-2024

பொருள்: மனைபிரிவு – கன்னியாகுமரி மாவட்டம் - பொன்மனை தேர்வு நிலை பேரூராட்சி – திருவட்டார் வட்டம் - பொன்மனை ஆ கிராமம் - புல எண் 340/2B-ல் 13584.45 ச.மீ (3.35ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுகளுக்கு சிறப்பு நிபந்தனைகளுடன் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திலிருந்து தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – பேரூராட்சி ஒப்பந்தல் வழங்குதல் தொடர்பாக.

பாபர்வை : 1) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாகர்கோவில் ந. க. எண் 19/2024 ககுமா நஉஅ. நாள் : 14.03.2024
2) தான பத்திரம் 919/2024 நாள் .06.03.2024
3) ஒப்பந்த பத்திர நாள் 29.03.2024.
4) தொடர்புடையவை.

பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட பொன்மனை ஆ கிராமம் புல எண் 340/2B –ல் 13584.45 ச.மீ (3.35ஏக்கர்) பரப்பளவுள்ள குடியிருப்பு மனைபிரிவுக்கு சிறப்பு நிபந்தனைகளுடன் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் பார்வை 1 ன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி மனைபிரிவில் சாலைக்காக 3239.58 ச.மீ இடமும், உள்ளாட்சி பொது உபயோகத்திற்காக 53.87 ச.மீ இடமும், தமிழ் நாடு மின்சார வாரிய பயன்பாட்டிற்காக 53.87 ச.மீ இடமும் பூங்காவிற்கு 1046.01 ச.மீ பார்வை 2 ன் படி தானமாக திருவட்டார் சார்பதிவாளர் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட மனைகளுக்கு சிறப்பு நிபந்தனை 7 ல் குறிப்பிட்டுள்ளவாறு அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்சச்சி துறை நாள். 04.05.2017 ன் படி திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்று விதிகள் 2017 விதி 3ன் படி கூராய்வு கட்டணமாக மனை ஒன்றிற்கு ரூ.1000 வீதம் ரூ.60,000 வரைவோலை எண்:783321 நாள் 02-04-2024-ன் படி பொன்மனை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் திருவட்டார் சார்பதிவக நாள். 02-04-2024-ன் படி மேற்கொண்ட புலன்களில் உட்பட்ட நிலங்களுக்கு ச.மீ ஒன்றிற்கு ரூ.925 வழிகாட்டி மதிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் விதி 9-ன் படி மனை இடத்திற்கான சந்தை நிலை மதிப்பீட்டு தொகையில் 3% தொகை ரூ.377123 நாள் 23.03.2024 படி – மனுதாரிடம் பெற்று அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாகர்கோவில் ந.க. எண் 19/2024 ககுமா நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள மனைபிரிவிற்கு பொன்மனை பேரூராட்சியின் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு: 1. ஒப்பந்த பத்திர நகல்
2. சிறப்பு நிபந்தனை நகல்

பொன்மனை தேர்வுநிலை பேரூராட்சி வெண்டலிகோடு பின் : 629 161

C. August
தலைவர்
பொன்மனை தேர்வுநிலை பேரூராட்ச்சி

பெறுநர் :

திரு.எஸ். சுரேஸ்குமார்
த/பெ செல்வமணி
4/179G V.T.M கல்லூாி ரோடு
பஞ்சம்பருத்திவிளை
அருமனை